## ஒரு பார்வை - பகுதி 1

**அல்லாஹ்வையும், இறுதி நாளையும், மலக்குகளையும், வேதங்களையும், நபிமார்களையும் நம்பும் மக்களே ஈமான் கொண்டவர்கள்; உண்மையானவர்கள். மேலும் அவர்கள் தர்மம் செய்பவர்களாகவும், தொழுகையை கடைபிடிப்பவர்களாகவும், வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களாகவும் இருப்பார்கள். ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது; இதில் நோயுற்றோர் மற்றும் பயணிகளுக்கு விதிவிலக்கு உண்டு. மேலும் இந்த மாதத்தில்தான் குர்ஆன் அருளப்பட்டது.**

## தராவிஹ் - 2: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 177 - 210; பிரிவு: 22 - 25

1. **எவர் அல்லாஹ்வையும், கடைசி நாளையும், மலக்குகளையும், வேதங்களையும், நபிமார்களையும், உண்மையாக விசுவாசித்து, தனது பொருட்களை அல்லாஹ்விற்காக உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், அடிமை மற்றும் கடன்காரரர்களுக்கும் கொடுத்து உதவி செய்து, தொழுகையை கடைப்பிடித்து, ஜகாஅத்தும் கொடுத்து வருகின்றாரோ அவரும், வாக்குறுதியை நிறைவேற்றுபவரும், வறுமை, நோய் மற்றும் யுத்த நேரத்தில் பொறுமையை கடைப்பிடிப்பார்களோ, அவர்கள்தான் நல்லவர்கள், உண்மையானவர்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 22)**

2. **உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது விதிக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டது. அதனால் நீங்கள் இறையச்சமுடையோர் ஆகலாம். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 23)**

3. யாரும் நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால், நோன்பு நோற்க வேண்டியது இல்லை. அதனை மற்ற நாட்களில் கணக்கிட்டு நோற்றுக் கொள்ள வேண்டும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 23)

4. நோயின் காரணமாக நோன்பு இருக்க முடியாவிட்டால், பரிகாரமாக ஒரு ஏழைக்கு உணவளிப்பது கடமையாகும். ஆயினும் நோன்பு இருப்பதே நன்று. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 23)

5. அல்குர்ஆன் ரமலானில் இறக்கப்பட்டது. அது மனிதனுக்கு வழி காட்டியாகும். கடமையான நோன்பை ரமலானில் நோற்க வேண்டும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 23)

6. அல்லாஹ் கூறுகிறான், 'நிச்சயமாக நான் அடியார்களுக்கு மிக சமீபமாக இருக்கின்றேன். என்னை அழைத்தால், அதற்கு விடை அளிப்பேன். அதனால் அவர்கள் என்னிடமே பிரார்த்தனை செய்யவேண்டும்; என்னையே விசுவாசிக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் நேர்வழி அடைவார்கள்'. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 23)

7. அல்லாஹ்விற்காக, ஹஜ்ஜையும், உம்ராவையும் நிறைவேற்றுங்கள். அல்லாஹ்விற்கு பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் வேதனை செய்வதில் மிகக் கடுமையானவன்.
(ஸூரா - அல்பகரா; பிரிவு: 24)

8. ஹஜ்ஜின் வழிமுறைகள் பற்றி கூறப்பட்டுள்ளது. ஹஜ்ஜுக்குத் தேவையான பொருட்களைச் சித்தப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். எனினும், தக்வா என்னும் பயபக்தியே மிக சிறந்ததாகும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 25)

9. விசுவாசிகளே! நீங்கள் இஸ்லாத்திற்கு முழுவதுமாக வந்து விடுங்கள். ஷைத்தானை பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பயங்கர விரோதி. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 25)

## ஒரு பார்வை - பகுதி 2

ஆரம்பத்தில் மனிதர்கள் அனைவரும் ஒரே இனத்தவராகவே இருந்தனர். பின்னர், அவர்கள் தங்களுக்குள் கருத்து வேறுபட்டு பல மதங்களை உருவாக்கினர். அவர்களை எச்சரிக்கை செய்யவும், அவர்கள் நேரான வழியில் வாழ்வதற்கும், அல்லாஹ், நபிமார்களை உலகுக்கு அனுப்பி வைத்தான். அனைத்து விஷயங்களிலும் இறையச்சம், மரியாதை, அல்லாஹ்வின் பயம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் திருமணம், விவாகரத்து மற்றும் மாதவிடாய் குறித்து வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

## தராவிஹ் - 2: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 211 - 231; பிரிவு: 26 - 29

1. ஆரம்பத்தில் மனிதர்கள் அனைவரும் ஒரே இனத்தவராகவே இருந்தனர். பின்னர், அவர்கள் தங்களுக்குள் கருத்து வேறுபட்டு பல மதங்களை உருவாக்கினர். அவர்களை எச்சரிக்கை செய்யவும், அவர்கள் நேரான வழியில் வாழ்வதற்கும், அல்லாஹ், நபிமார்களை உலகுக்கு அனுப்பி வைத்தான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 26)

2. ஆனால், மக்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பொறாமையின் காரணமாக வேதங்களுக்கு மாறு செய்தனர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 26)

3. சோதனைக்கு உள்ளாகாமல் சுவர்க்கம் சென்றுவிடலாம் என்று நினைத்துக் கொண்டீர்களா? உங்களுக்கு முன்சென்ற மக்களை கொடிய வறுமையும், நோயும் வாட்டி வதைத்த பொழுது, தூதர்களும், விசுவாசிகளும் ‘அல்லாஹவின் அருள் எங்களுக்கு எப்பொழுது கிடைக்கும்?’ எனக் கேட்டனர். ஆனால், அல்லாஹ்வின் அருட்கொடை எப்போதும் நின்றதே கிடையாது. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 26)

4. இணை வைத்து வணங்கும் பெண்களை, அவர்கள் விசுவாசம் கொள்ளும் வரையில் அவர்களை திருமணம் செய்யக் கூடாது. இணை வைக்கும் ஒரு பெண் உங்களைக் கவரக்கூடியவளாக இருந்தபோதிலும், அவளைவிட முஃமினான ஓர் அடிமைப் பெண் நிச்சயமாக மேலானவள் ஆவாள். இது பெண்களுக்கும் பொருந்தும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 27)

5. மாதவிடாய் காலங்களில், உடல் உறவு கொள்ளாமல் உங்கள் மனைவியரிடமிருந்து விலகி இருங்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 28)

6. 'தலாக்' கூறப்பட்ட பெண்கள், மூன்று மாதவிடாய்கள் வரும்வரையில் காத்திருக்கவும். அதன் பின்புதான், தலாக் உறுதியாகும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 28).

*அப்பெண்கள் பகிரங்கமான மானக்கேடான காரியத்தைச் செய்தாலன்றி அவர்களை அவர்களின் வீடுகளிலிருந்து நீங்கள் வெளியேற்றக் கூடாது; அவர்களும் வெளியேறக் கூடாது. (ஸூரா அத்தலாக் 65 - வசனம் 1)*

7. அவர்கள் கர்ப்பமாக இருந்தால், அதை மறைக்கக் கூடாது. இந்த சூழ்நிலையில் கணவன் சமாதானம் செய்துகொண்டு, மனைவியை சேர்த்துக் கொள்ளலாம். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 28)

8. 'தலாக்' வாங்கிய பெண்களை, அவர்கள் இத்தாவின் தவணை முடியும்வரை, கருணையுடனும், மதிப்புடனும் நடத்துங்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 29)

9. அல்லாஹ்வுடைய வார்த்தைகளை ஏளனமோ, உதாசீனமோ செய்யாதீர்கள். அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். அவன் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவன். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 29)

## ஒரு பார்வை - பகுதி 3

**கணவன் மரணத்துக்கு பின், பெண்கள் மறுமணத்திற்காக 4 மாதங்கள் மற்றும் 10 நாட்கள் காத்திருக்க வேண்டும். தாலூத் (அலை) அவர்களை அரசராக நியமித்ததன் மூலம் அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கே அரசாட்சியை வழங்குகிறான் என அறிய முடிகிறது. அல்லாஹ்வின் உதவியால் சிறு கூட்டத்தினர் பெரிய படையையும் வெல்லமுடியும் எனவும் அறிய முடிகிறது. தாவூத் (அலை) மற்றும் ஜாலூத்தின் வரலாறு கூறப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 2: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 232 - 253; பிரிவு: 30 - 33

1. **நீங்கள் தலாக் கூறிய பெண்கள், தங்களின் இத்தா காலம் முடிந்தபின், வேறு ஆணுடன் திருமணம் செய்து கொள்ளலாம். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 30)**

2. **கணவன் மரணத்துக்கு பின், விதவைகள் மறுமணத்திற்காக 4 மாதங்கள் மற்றும் 10 நாட்கள் காத்திருக்க வேண்டும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 30)**

3. **நபி மூஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப்பின், இஸ்ராயில் சந்ததிகள், தங்களுக்கு ஒரு அரசன் வேண்டும் என நபி ஷம்வீல் இடம் கேட்ட சம்பவத்தை நினைவு கூறுகிறான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 32)**

4. **நபி தாலூத் (அலை) அவர்களை அரசராக நியமித்தபின், அவர் வசதியற்றவராக இருந்ததால், அவரை மக்கள் அரசராக ஏற்கவில்லை. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 32)**

5. **ஆனால் அல்லாஹ்தான் தாலூத் (அலை) அவர்களை நபியாக தேர்ந்தெடுத்து, அவரை கல்வியிலும், பலத்திலும்**

அதிகப்படுத்தினான் என நபி ஷம்வீல் கூறினார்கள். அல்லாஹ், தான் விரும்பியவருக்கே தன் ராஜ்ஜியத்தை அளிப்பான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 32)

6. தாலூத் (அலை) படை ஆற்றை கடக்கும்போது, ஆற்றிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் நீரை குடிக்க வேண்டாம் என அல்லாஹ் கட்டளையிட்டான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 33)

7. ஆனால் பெரும்பாலானவர்கள் அதை மீறினர். அவர்கள் ஆற்றை கடந்த பின்னர், தங்கள் எதிரி ஜாலூத்தை எதிர்க்க சக்தி இழந்து விட்டோம் என்றனர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 33)

8. ஆனால் அல்லாஹ்வின் உதவியால் சிறு கூட்டத்தினர் பெரிய படையையும் வென்றதுண்டு என விசுவாசிகள் கூறினர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 33)

9. மேலும், ஜாலூத்தையும், அவன் படைகளையும் போர்களத்தில் சந்திக்க அவர்கள் முன்னேறிச் சென்ற போது, "எங்கள் இறைவா! எங்களுக்குப் பொறுமையைத் தந்தருள்வாயாக! எங்கள் பாதங்களை உறுதியாக்குவாயாக! கா஁பிரான இம்மக்கள் மீது நாங்கள் வெற்றியடைய உதவி செய்வாயாக!" எனக் கூறிப் பிரார்த்தனை செய்தனர். இவ்வாறாக, அல்லாஹ்வின் உதவியோடு அவர்கள் எதிரிகளை முறியடித்தனர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 33)

10. தாவூத் (அலை) அவர்கள் ஜாலூத்தை கொன்று, அல்லாஹ்வின் உதவியோடு அரசவையை பெற்றார். அல்லாஹ் அவருக்கு ஞானத்தையும், தான் விரும்பியவற்றை (ஸபூர் வேதம் மூலம்) அவருக்கு கற்றுக் கொடுத்தான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 33)

## ஒரு பார்வை - பகுதி 4

இப்ராஹீம் (அலை) அவர்கள் நம்ரூத்துடன் நடத்திய விவாதம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. உஸைர் (அலை) மற்றும் இப்ராஹீம் (அலை) அவர்கள், 'அல்லாஹ் இறந்தவர்களை எவ்வாறு உயிர்ப்பிக்கிறான்' என்று கேள்வி எழுப்பியபோது அவர்களுக்கு காட்டப்பட்ட அற்புதங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வுடைய வழியில் செலவு செய்வது மற்றும் வட்டியிலிருந்து விலகி இருப்பதன் முக்கியத்துவம் விளக்கப்பட்டுள்ளது.

## தராவிஹ் - 2: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 254 - 281; பிரிவு: 34 - 38

1. அல்லாஹ் விசுவாசிகளின் பாதுகாவலன். அவன், அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி வெளிச்சத்தின்பால் கொண்டு வருகிறான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 34)

2. அரசன் நம்ரூதுக்கும், இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் இடையே தர்க்கம் நடைபெற்றது. அவன் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் இறைவன் குறித்து எதிர் வாதம் புரிந்தான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 35)

3. பிறப்பும், இறப்பும் அல்லாஹ்வை கொண்டது என இப்ராஹீம் (அலை) அவர்கள் கூற, நம்ரூத் அதை மறுத்து சிறையில் இருக்கும் ஒருவனை விடுவித்து, மற்றொருவனை கொன்று, இதெல்லாம் தன்னிடம் இருப்பதாக இறுமாப்புற்றான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 35)

4. சூரியனை கிழக்கிலிருந்து உதிக்க அல்லாஹ் கட்டளையிட்டதாக இப்ராஹீம் (அலை) கூறி, அதை மேற்கிலிருந்து உதிக்க வைக்க முடியுமா? என நம்ரூதிடம் கேட்க, அவனால் அதை செய்ய முடியாமல் தோற்றுவிட்டான்.

அல்லாஹ் அநியாயக்காரர்களுக்கு வழிகாட்டுவது இல்லை. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 35)

5. உஸைர் (அலை) தான் செல்லும் வழியில் ஒரு கிராமம் அழிந்து இருந்ததைப் பார்த்தபின், ‘அல்லாஹ் இதற்கு எவ்வாறு உயிர் கொடுப்பான்?’ என வினவினார். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 35)

6. அல்லாஹ், உஸைர் (அலை) அவர்களை மரணிக்க வைத்து, நூறு வருடம் கழித்து உயிர்ப்பித்தான். அல்லாஹ் அவரிடம், “நீர் எவ்வளவு காலம் இவ்வாறு இருந்தீர்” என கேட்க, அவர் ஒருநாள் அல்லது சற்று நேரம் என கூறினார். அதற்கு அல்லாஹ், நீர் உண்மையாகவே நூறு வருடம் இந்நிலையில் இருந்தீர்’ என கூறினான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 35)

7. அல்லாஹ் அவருடைய உணவையும், பானத்தையும் பார்க்கச் சொன்னான். அவை கெட்டுப் போகாமல் இருந்தது. ஆனால் அவருடைய கழுதை இறந்து, எலும்புகளாக இருந்தது. அல்லாஹ் தன் அத்தாட்சியை காட்ட, இறந்த கழுதையின் மக்கிப்போன எலும்புகளை சேர்த்து, அதன் மீது மாமிசத்தை அமைத்து, உயிர்ப்பித்து காண்பித்தான். நிச்சயமாக அல்லாஹ், யாவற்றின் மீதும் மிக்க ஆற்றலுடையவன். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 35)

8. இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம், “இறந்தவர்களை எவ்வாறு உயிர்ப்பிக்கின்றாய்?” எனக் கேட்டார்கள். அல்லாஹ், “நீர் (இதை) நம்பவில்லையா?” எனக் கேட்க, “மெய்யாக நம்புகிறேன்! ஆனால் என் இதயம் அமைதிபெறும் பொருட்டே (இவ்வாறு கேட்கிறேன்)” என்று கூறினார். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 35)

9. அதற்கு அல்லாஹ், அவர்கள் மூலமாக 4 பறவைகளை துண்டு துண்டாக வெட்டி, வெவ்வேறு மலைகளில் மீது வைக்கச் செய்து, இப்ராஹீம் (அலை) அவர்களை, அவற்றை கூப்பிட வைத்து, உயிர்ப்பித்து காண்பித்தான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 35)

10. அல்லாஹ்வுடைய வழியில் செலவு செய்வது, ஒரு விதையிலிருந்து ஏழு கதிர்கள், அவை ஒவ்வொன்றிலும் 100 தானிய வித்துகள் உருவாகுவது போல், அல்லாஹ் அதன் நன்மையை பல மடங்கு இரட்டிப்பாக்குவான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 36)

11. மக்கள் தங்களிடமுள்ள நல்ல பொருட்களையே தானம் செய்ய வேண்டும். தாங்கள் விரும்பாத ஒன்றை ஏழைகளுக்கு கொடுக்க வேண்டாம். தர்மம் செய்தால், ஷைத்தான் உங்களை வறுமையைக் கொண்டு பயமுறுத்துவான். ஆனால் அல்லாஹ்வோ தன்னுடைய மன்னிப்பையும், செல்வத்தையும் வழங்குவதாக வாக்களிக்கின்றான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 37)

12. அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு கல்வியைக் கொடுக்கின்றான். அது அவர்களுக்கு பெரும் செல்வமாகும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 37)

13. வட்டி வாங்கி வாழ்பவர்கள் ஷைத்தான் பிடித்த பைத்தியமாக எழுப்பப்படுவார்கள். வியாபாரம் ஹலால், வட்டி ஹராம். அல்லாஹ் வட்டியை அழித்து, தர்மங்களை வளர்க்கின்றான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 38)

14. நீங்கள் விசுவாசிகளாக இருந்தால், அல்லாஹ்விற்குப் பயந்து, வட்டியில் மீதியிருப்பதை வாங்காமல் விட்டு விடுங்கள். இல்லையெனில், அல்லாஹ்வுடனும், அவனுடைய தூதருடனும் யுத்தம் செய்யத் தயாராகி விடுங்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 38)

15. ஆயினும் நீங்கள் மனம் வருந்தி விட்டால், உங்கள் பொருளின் அசல் தொகை உங்களுக்குரியது. எனினும், கடன் வாங்கியவர் கஷ்டத்தில் இருந்தால், அவருக்கு தேவையான தவணைக் காலத்தை கொடுங்கள். இன்னும் கடனைத் தீர்க்க இயலாதவருக்கு அதை தர்மமாக விட்டு விடுவீர்களானால்

**அது உங்களுக்குப் பெரும் நன்மையாகும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 38)**

## ஒரு பார்வை - பகுதி 5

**நியாயத்தை உறுதிப்படுத்தவும், சச்சரவுகளைத் தவிர்க்கவும், கடன்கள் கொடுக்கல், வாங்கல்கள் சாட்சிகளுடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. ஆனால், ரொக்கமாக நடக்கும் சாதாரண பரிவர்த்தனைகளுக்கு எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் தேவையில்லை. உண்மையான மனநிறைவு என்பது பொருள் செல்வத்தைப் பெறுவதில் இல்லை; மாறாக அல்லாஹ்வின் பொருத்தத்தை அடைவதில் உள்ளது என்பதை வலியுறுத்துவதன் மூலம் ஸூரா ஆலிஇம்ரான் தொடங்குகிறது.**

## தராவிஹ் - 2: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 282 - 286; பிரிவு: 39 - 40

1. **குறிப்பிட்ட தவணையுடன் கடன் கொடுக்கல், வாங்கலில் ஒப்பந்தத்தை எழுதிக்கொள்ளுங்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 39)**

2. **கடன் வாங்குபவர் அந்த ஒப்பந்தத்தில் இருக்கவேண்டிய வாசகத்தைக் கூறி எழுதிக் கொள்ளவும். அதில் 2 ஆண்கள் சாட்சிகளாகவும் அல்லது 1 ஆண், 2 பெண்கள் சாட்சிகளாகவும் இருக்கலாம். இதனால் எந்தவித குழப்பங்களும் பின்னர் வராது. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 39)**

3. **ரொக்கமாக நடக்கும் சாதாரண பரிவர்த்தனைகளை ஒப்பந்தத்தில் எழுத கட்டாயம் இல்லை. அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ் யாவற்றையும் மிக அறிந்தவன். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 39)**

4. **அல்லாஹ் எந்த உயிரையும் அதன் சக்திக்கு மேல் சோதிப்பதில்லை. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 40)**

5. யா அல்லாஹ்! நீ எங்களை குற்றம் பிடிக்காதே! எங்களை மன்னித்து விடு! எங்களுக்கு கருணை புரிவாயாக! நீயே எங்களது பாதுகாவலன்! உன்னை நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி புரிவாயாக! (ஸூரா - அல்பகரா; பிரிவு: 40)

**ஸூரா - 3, ஆலிஇம்ரான்; வசனம்: 1 - 20; பிரிவு: 1 - 2**

6. அலிஃப்; லாம்; மீம்! அல்லாஹ்வை தவிர வேறு இறைவன் இல்லை. அவன் நித்திய ஜீவன், நிலையானவன். இந்த புனித குர்ஆனை இறக்கி வைத்தான். இதற்கு முன்பு தவ்ராத்தையும், இன்ஜீலையும் அவனே இறக்கி வைத்தான். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 1)

7. அல்லாஹ் (இவ்) வேதத்தை இறக்கினான். இதில் விளக்கமான வசனங்கள் இருக்கின்றன. இவைதான் இவ்வேதத்தின் அடிப்படையாகும். குர்ஆனில் பல அர்த்தங்களுடைய வசனங்களும் இருக்கின்றன. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 1)

8. எவர்கள் இருதயங்களில் கோளாறு இருக்கிறதோ, அவர்கள் குழப்பங்களை உண்டு பண்ணக் கருதி, பன்முகப் பொருளுடைய வசனங்களைத் தேடித்திருந்து அவற்றின் கருத்தை திரித்துக் கூற முயல்வர். ஆயினும் அதன் உண்மைக் கருத்தை அல்லாஹ்வையன்றி யாரும் அறிய மாட்டார்கள். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 1)

9. மண், பெண், பொன் (தங்கம், வெள்ளி), உயர்ந்த குதிரைகள் மற்றும் கால்நடைகள் ஆகியவை மீது மனிதன் அதிகம் நாடுகிறான். இவைகள் நிலையற்ற இப்பூமியின் நிலையில்லா அலங்காரங்களே! (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 2)

10. ஆனால் உண்மையான செல்வம் விசுவாசிகளுக்கு சொர்க்கத்தில் உள்ளது. அவர்கள் பொறுமையானவர்கள்,

உண்மை பேசுபவர்கள், அல்லாஹ்வை வழிபடுபவர்கள், தர்மம் செய்பவர்கள், ஸஹர் நேரங்களில் பாவமன்னிப்பு கோருபவர்கள். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 2)

---